விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

**Valampurii**

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 21 வெள்ளிக்கிழமை (04.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கடும் மழை காரணமாக தெற்கில் அறுவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு, காலி மற்றும் வத்தேகம ஆகிய பகுதிகளில் இவ் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இம் மழைகாரணமாக ஏற்பட்ட மின்சாரத் தாக்கம், மண் சரிவு உட்பட்ட சம்பவங்கள் காரணமாகவே இவ் உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் இரவுமுதல் நேற்று முற்பகல் 11.30 மணிவரை கொழும்பில் 154 மில்லி மீற்றர் மழை பதிவாகியிருப்பதாக (06 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் இருவர் சுட்டுக்கொலை

(வேலணை)

வேலணை 4 ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கந்தையா கண்ணதாசன் (வயது-30), அதே இடத்தைச் சேர்ந்த சிவபாலன் கஜேந்திரபாலன் (வயது - 21) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சித்திரா பௌர்ணமி தினத்திற்கு ஆலயத்திற்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே (06 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கவின் தீர்வு யோசனை இன்று கையளிக்கப்படும்

(கொழும்பு)

எமது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மக்களின் கலாசார ஒழுக்க விழுமியங்களுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வு யோசனை ஒன்றினை சர்வகட்சிக் குழுக்களின் தலைவரிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்று உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப் போவதாக அதன் செயலாளர் நாயகமும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கான நிதி உதவியை பிரித்தானியா இடைநிறுத்தியது

## கோதுமை மாவின் விலை ரூபா 3.50 அதிகரிப்பு

(கொழும்பு)

பிறிமா கோதுமை மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் 3 ரூபா 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்பொழுது 42 ரூபாவாகக் கொழும்பில் விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மா நேற்று நள்ளிரவு முதல் 45 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டது.

சர்வதேச சந்தையின் தாக்கமே இவ் விலையுயர்வுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை குடாநாட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு கிலோ மா 48 ரூபாவிற்கும் தனியார் வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ மா 50 ரூபாவிற்கும் ஏற்கனவே விற்பனையாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## வவுனியாவில் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் இராணுவத்தினரின் முன்னகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலமோட்டைப் பகுதியூடாக நேற்று முற்பகல் 10.30 (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கமானது மனித உரிமைகளை ஏற்றுக் கொண்டு இராணுவச் செலவீனங்களைக் குறைக்கும்வரை பிரித்தானியாவின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் அறிவித்துள்ளது.** (06 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமான நிலைய செயற்பாடுகள் இரவில் நிறுத்தம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் மே மாதம் 10 ஆம் திகதியிலிருந்து இரவில் சில மணிநேரங்களுக்கு இடைநிறுத்தம் செய்யப்படுவதாகவும் இடைநிறுத்தம் செய்யப்படும் நேரத்தில் வரும் விமானங்கள் மாற்றியமைக்கப்பட்ட நேரத்தில் வந்திறங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல, நாங்கள் இப்போது சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

இரவு 10.30 மணியிலிருந்து அதிகாலை 4.30 மணிவரை விமான நிலையத்தின் செயற்பாட்டை (06 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

தரிசனம்

## வேலணையில் கைது செய்யப்பட்ட இருவருக்கும் விளக்கமறியல்!

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலில் கைது செய்யப்பட்ட அவ் ஆலய குரு உட்பட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக காங்கேசன்துறைக்கு பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் அவ் ஆலயத்தின் பிரதம குருவையும் அறங்காவல் சபைத் தலைவரையும் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்த இருவரையும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளுக்காக காங்கேசன்துறை குற்றப்புலனாய்வுப் பொலிஸில் ஒப்படைக்க அனுமதி தருமாறு நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைக்கு அனுமதியளித்த ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு இருவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-3)

தரிசனம்
சிறப்புப் பார்வை

## ஆட்லறித் தளம் தாக்கப்படவில்லை
### இராணுவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கிலுள்ள இராணுவத்தின் ஆட்லறித் தளம் புலிகளின் மோட்டார்த் தாக்குதலில் சேதமடைந்ததாக வெளியான செய்தியை யாழ்.இராணுவம் மறுத்துள்ளது.

அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழக அரசை அணுக வேண்டும்!
## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தமிழக அரசாங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் சமாதானம் தேடி உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கின்றனர். எனினும் தமிழகத்திற்கு எந்த ஒருவரும் செல்வதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் புதுடில்லியைவிட தமிழகமே முக்கியத்துவம் வாய்ந்த இடமென குறிப்பிட்டுள்ளார்.

தமிழக எதிர்க் கட்சித் தலைவர் ஜெயலலிதாவின் கருத்துப்படி, தமிழகத்திலிருந்தே விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் சென்னைக்குச் சென்று பேச்சுவார்த் (06 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வருக்கு புலிகள் மீது பற்றும் பாசமும் இருக்கின்றது!
## ஜெயலலிதா சாடல்

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்குத் தமிழக முதல்வர் கருணாநிதி மறைமுக ஆதரவு அளித்து வருகின்றார். புலிகள் மீது அவருக்கு எப்பொழுதும் பற்றும் பாசமும் இருக்கின்றது என்று [illegible].க. பொதுச் செயலாளரும் தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

தி.மு.க. அரசால் தயாரிக்கப்பட்ட காவல் துறை மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. (06 ஆம் பக்கம் பார்க்க)

# மலையக, முஸ்லிம் மக்களுக்கு தனித்தனி உப பிராந்திய சபை


(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது அரசியல் தீர்வு யோசனைகளை இன்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அதன் உப தலைவரும் முன்னாள் எம்.பியுமான ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

ஐந்து பிராந்திய சபைகள் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும் எனவும் ஒவ்வொரு பிராந்திய சபையும் இந்திய மாநிலங்களுக்குச் சமமான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் தமது யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மலையகப் (06 ஆம் பக்கம் பார்க்க)

ந[illegible]வறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# தரிசனம்

රාවය
ராவய

# யுத்தத்தில் முடிவு என்ன?

## தெற்கின் கருத்துக்கள்

### எதிர்பார்க்கும் வெற்றிகிட்டாது

விரிவுரையாளர்
லரன்ஸ் புரசிங்க

இந்த இருதரப்பு யுத்தமானது இரு தசாப்தங்களாக விரிவடைந்த ஒன்று. இந்த யுத்தத்தில் எந்தத் தரப்புக்கும் இதுவரை வெற்றி கிட்டவில்லை என்பதே வரலாற்றின் சாட்சியாக



உள்ளது. விடுதலைப்புலிகள் தந்திரோபாயமான யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கம் அதனை விளங்கி உள்வாங்கிக்கொள்ளும்போது விடுதலைப்புலிகள் தமது உபாயங்களை மாற்றிக்கொள்கின்றனர். தொடர்ந்து இவ்வாறே நடைபெறுகின்றது. அதனால் இந்த யுத்தமானது பயனற்ற நடவடிக்கையாக மாறி விட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பினர் விடுதலை என்ற வேட்கையை ஆயுததாரிகளாகவும் உபாயத்தை பயன்படுத்தியும் அடைய முயற்சிக்கின்றனர். ஆயுததாரிகளாக அன்றி மக்கள் செயற்பாட்டின் மூலம் போராட்டத்தில் அவர்கள் வெற்றிபெற்றிருக்க முடியும். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமாயின் தமிழ் மக்கள் அப் போராட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். ஆயுதப் போரட்டத்தைவிட அவ்வாறான மக்கள் போராட்டம் இலக்கை அடைய சிறந்த வழியாக இருந்திருக்கும்.

யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதனால் இரு தரப்புக்கும் வெற்றிகிட்டப் போவதில்லை. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதான பாதையில் பிரவேசித்து அதிகாரப் பரவலாக்கல் என்ற அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க முடியுமாயின் தமிழ் மக்களின் அபிலாஷைகளும் நிறைவேறும். சிங்கள சமூகத்தில் முன்னேற்ற நிலை ஏற்படும். இல்லாவிட்டால் இந்த நாடு இன்னுமொரு ருவாண்டாவாகவே மாறும்.

### உளவியல் பாதிப்பு குறித்து அக்கறையில்லை

உளவியல் ஆலோசகர் டாக்டர்
றுவன் எம்.ஜயதுங்க

யுத்தம் சமூகத்தின் பாதகமான ஒரு அனுபவமாகும். யுத்தம் இரு தரப்புக்கும் உள பாதிப்புடைய பகுதியினரை கொடையாக வழங்கியுள்ளது. அதற்கு சரியான சிகிச்சைகள் இன்றி நாம் யுத்தத்தை முன்னெடுத்துக் கொண்டிருப்பது சமூக ரீதியல் மிகவும் மோசமான விடயமாகும். இதனால் சமூகத்தில் பல விதமான உள ரீதியான பாதிப்புகள் ஏற்படக்கூடும். இங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என்று சிலர் தர்க்கிக்கக் கூடும். இதற்கு தீர்வு யுத்தம்தான் என்றும் அவர்கள் கூறுகின்றனர். பாசிசவாதம் ஐரோப்பா முழுவதும் பரவிய பொழுது யுத்த மன அழுத்தம் ஏற்படும் என்பதற்காக நேச அணிகள் யுத்தம் செய்யாமல் இருக்கவில்லை. ஆனால் அதற்கு சமமாக உளவியல் விடயங்கள் குறித்தும் அவர்கள் அவதானம் செலுத்தினர்.

இரண்டாம் உலகப் போரின் போது யுத்தம் காரணமாக மன அழுத்தம் ஏற்பட்டு உளவியல் பாதிப்புக்குள்ளான 23 சதவீதமானோர் யுத்தப் பிரதேசத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர்.

கொரியா யுத்தத்தில் அந்த எண்ணிக்கை 6 சதவீதமாகக் குறைவடைந்தது. கொரியா யுத்தத்தின் போது அல்பட் க்ளாஸ் என்ற அமெரிக்க உளவியலாளரின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டதே இதற்குக் காரணம். எமது நாட்டில் இவ்வாறான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படுவதே இல்லை.


நாம் யுத்தத்தின் போது பொருளாதார இழப்புகள் குறித்தே கணிப்பீடுகளை மேற்கொள்கின்றோம். ஆனால் யுத்தத்தினால் சமூகத்திற்கு ஏற்படும் உளப் பாதிப்புகள் பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து கொண்டிருக்கும்.

### யுத்தத்தின் கொரூரக் கரங்களில் நாம்

கவிஞர் லால் ஹேகொட

யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அதன் கொடூரமும் அநியாயமும் தென்படுவதில்லை. ஆயுதங்களை உற்பத்தி செய்வோர் மற்றும் அவர்களின் உள்நாட்டு தரகர்கள் ஆகியோரே யுத்தத்தின் உண்மையான உரிமையாளர்களாவர்.

வடக்கு கிழக்கு எல்லைக் கிராமங்களில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களும் அவர்களின் குழந்தைகளும் யுத்தத்தின் கொடூரங்களைச் சுமந்துகொண்டு மரண பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். யுத்த வியாபாரிகள் ஈட்டிக் கொண்ட பணத்தில் முதலீடுகளை மேற்கொண்டு சமய நிகழ்வுகளிலும்



கலந்துகொண்டு இப் பூவுலகில் சகல சௌகரியங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நாட்டில் யுத்தம் நீடித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் யுத்த உப கலாசாரமும் யுத்த உபபொருளாதாரமும் உருவாகும். அனுராதபுரத்தில் பாலியல் தொழில் நடைபெறும் இடங்களும் பாலியல் தொழில் செய்யும் பெண்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அதில் லட்சக் கணக்கில் வேதனம் பெறும் அந்தரங்க செயலாளர்களும் படையினருக்கு உணவுகளை விநியோகிக்கும் முதலாளிகளும் அந்த முதலாளிகளுக்கு காய்கறிகள், மீன்கள் விற்கும் விவசாயிகளும், மீனவர்களும் யுத்தத்தின் தயவில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ஈழத்திற்கு புறம்பான எதனையும் ஏற்காத விடுதலைப் புலிகளுடனும் சிங்களவர்களைவிட தமிழர்களுக்கு இருக்கும் பிரச்சினை என்னவென்று கேட்கும் தேசப்பற்றுள்ளவர்களுடனும் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் யுத்தத்தின் எதிர்காலம் குறித்து எவ்வாறு கற்பனை செய்து கொள்வது?

### விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க வேண்டும்

பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ்

விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கும்வரை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டாது. அவர்கள் விரும்பி தன்னிச்சையாக யுத்தச் செயற்பாடுகளையும் வன்முறைகளையும் கைவிடுவார்கள் என்று கூறமுடியாது. அதனால் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப்



புலிகளின் யுத்த பலத்தை உபாய ரீதியில் வீழ்த்துவது அவசியமாகும்.

இந்த யோசனைக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்போரின் தர்க்கங்களை நிராகரிக்க வேண்டும். சிலர் யுத்தத்தினால் பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதினால் அவற்றை தவிர்த்துக்கொள்ள யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றனர். இது நீண்டகால நோக்கு இன்றி முன்வைக்கப்படும் கருத்தாகவே தோன்றுகின்றது.

விடுதலைப் புலிகளின் வன்முறைகளை முறியடிக்க தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பம் கடந்த 20 வருடங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களை விட மிகவும் சாதகமானது என்றே நான் கருதுகின்றேன். இந்த சந்தர்ப்ப சூழ்நிலையை பயன்படுத்தாவிட்டால் இதுவரை நிகழ்ந்த உயிர்ச் சேதங்களைவிட மிக மோசமான உயிர்ச் சேதங்கள் ஏற்படும் அபாய நிலை உள்ளது.

இது வெற்றிகொள்ள முடியாத யுத்தம் என்று சிலர் தர்க்கம் புரிகின்றனர். அமெரிக்க தூதர் ஒரு சில இடதுசாரி அரசியல்வாதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதானிகள் ஆகியோர் இந்த யுத்தத்தை வெற்றிகொள்ள முடியாது என்ற பிரசாரத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த கருத்தானது விடுதலைப் புலிகளினதும் அரசாங்கத்தினதும் ஒப்பீடான போர் பலத்தை விளங்கிக் கொள்ளாமல் முன்னெடுக்கப்படும் தர்க்கம் என்றே கூற வேண்டியுள்ளது.

சமஷ்டி வரையறைக்குள் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதினால் விடுதலைப் புலிகளை ஜனநாயக அரசியலுக்குள் இழுத்துவர முடியும் என்றும் ஒருசிலர் கூறுகின்றனர்.

இந்தக் கருத்து மிகவும் பலவீனமானது. இதனை சமாதான செயற்பாடாகக் கூறிக்கொள்வதும் கடந்த கால அனுபவங்களை விளங்கிக் கொள்ளாமற் கூறப்படும் கருத்தாகும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிடாத நிலைமையில் நாம் அதிகாரப் பகிர்வினை மேற்கொண்டால் வடக்கு கிழக்கு மக்களினது மட்டுமன்றி இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகளை மீறும் செயலாகவே அது அமையும். விடுதலைப் புலிகளை யுத்தத்தினால் தோற்கடிக்க வேண்டியது இதனாலேயே அவசியமாகின்றது.

### ஆயுத வியாபாரிகளுக்கே வெற்றி

நடனக் கலைஞர் மிரெண்டா ஹேமலதா

யுத்தத்தின் காரணமாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் எந்தவிதமான நன்மைகளும் ஏற்படப் போவதில்லை. இந்த இரு தரப்பினருக்கும் ஆயுதங்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கே நன்மை ஏற்பட்டுள்ளது.

நாம் தொடர்ந்து யுத்தம் புரிகின்றோமாயின் அது இந்த யுத்த வியாபாரிகளிடம் சிக்குப்பட்டு விட்டோம் என்பதையே குறிக்கின்றது. யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டு அமைதி வழியில் எப்படி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணப் போகின்றோம் என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். இதுபற்றி சிந்திக்கக்கூட இரு தரப்பினருக்கும்



அக்கறையில்லாவிட்டால் பெரும் அழிவே ஏற்படும்.

யுத்தம் நாட்டை பொருளாதார ரீதியிலும் உளவியல் ரீதியிலும் பாதிக்கும் விடயமாகும். பல சமூகச் சிக்கல்களையும் யுத்தம் வழங்கிவிடும். அத்துடன் இளைஞர் சமுதாயமே இதனால் அழிவுறுகின்றது. வடக்கிலும் தெற்கிலும் மக்களை ஒன்றுபடுத்துவதை விடுத்து ஒருவரையொருவர் கொலை செய்யும் நிலைக்கு நாம் செல்லக் கூடாது. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத ஆட்சியாளர்கள் வடக்கிலும் தெற்கிலும் இல்லாமை மிகவும் மோசமான நிலைமையாகும்.

மறுபுறம் எமது நாட்டில் இப்படியொரு பலவீனம் இருப்பதையும் நான் உணர்கின்றேன். ஏற்படும் பிரச்சினைகளை அரசாங்கமோ அல்லது வேறு நபர்களோ தீர்த்து வைக்கும்வரை எமது நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். மக்கள் எப்பொழுதும் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர். எந்த விதமான தலையீடுகளையும் அவர்கள் மேற்கொள்வதில்லை. அதனால் ஆட்சியாளர்களும் தம் விருப்பின்படி செயற்படுகின்றனர்.

ஏனெனில் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்று அவர்களுக்கு தெரியும்.

கிரிக்கெட் போட்டியில் தோல்வியடைந்ததும் இந்திய கிரிக்கெட் இரசிகர்கள் வீதியில் இறங்கிப் போராடினர். அப் போராட்டத்திற்கு யாரும் தலைமைத்துவம் வழங்கவில்லை. அவர்கள் உணர்ச்சிவசப்படும் வகையில் செயற்பட்டது தவறே. இருப்பினும் அது தாம் விரும்பும் விடயத்திற்காக அவர்கள் மேற்கொண்ட ஒரு தீர்மானம். தனக்காக முன்னின்று போராடும் அவ்வாறான சமூகம் இங்கு இல்லாமை பெரும் குறையாகும்.

### தீர்வு இல்லாதவரை யுத்தம் செல்லுபடியாகும்

பத்தேகம சமித்த தேரர்

இந்தப் பிரச்சினையை யுத்தத்



தினால் வெற்றிகொள்ள எவராலும் முடியாது. சிங்கள மக்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை முன்வைக்காத வரை விடுதலைப் புலிகளுக்கு சாதகமானசூழலே நிலவும். தீர்வொன்றினை முன்வைக்காமல் போரிடும் வரை வட பகுதி மக்களின் கருத்து நிலைகளை மாற்ற முடியாத நிலை ஏற்படும். நாம் இங்கிருந்து கொண்டு யுத்தம் புரியும் போது வட பகுதி மக்கள் குறிப்பாக இளைஞர்கள் அவர்களை இனச்சுத்திகரிப்பு செய்யவே இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று கருதுவர்.

அதனால் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினை முன்வைத்து அடிப்படைவாத சிந்தனைகளிலிருந்து விலகி இந்தப் பிரச்சினையை திறந்த மனதுடன் நோக்க வேண்டும். நாம் இந்த நிலைப்பாட்டை மேற்கொள்வோமானால் கெரில்லா அமைப்பொன்றினால் நீண்ட நாள் நிலைத்திருக்க முடியாது.

உண்மையில் பாலசிங்கத்தின் மரணத்தின் பின்பு விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வு பற்றி சிந்திக்காத நிலையில் இருக்கின்றனர். பாலசிங்கம் ஓரளவுக்கு அரசியல் தீர்வு மீது நம்பிக்கை கொண்டிருந்தார். கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் யாப்பு திருத்தப்பட்டால் அதனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியும் என்று அவர் ஒரு முறை குறிப்பிட்டிருந்தார்.

கலந்துரையாடியவர்
**விமலநாத் வீரரத்ன**

அதன் மூலம் அவர் அரசியல் தீர்வு மீது அக்கறை கொண்டிருந்தார் என்பதை விளங்கிக்கொள்ள முடியும். இன்று அவ்வாறு விடுதலைப் புலிகளை வழிநடத்த அரசியல் ஆலோசகர் இல்லாததால் விடுதலைப்புலிகள் பல சிக்கல்களை எதிர் கொள்கின்றனர்.

யுத்த ரீதியில், சர்வதேச ரீதியில் அவர்கள் மிக மோசமான நிலையை அடைந்துள்ளனர் என்று கூறாமல் இருப்பதற்கு விடயங்கள் ஏதும் இல்லை.



# தரிசனம் 06

ராவய

# யுத்தமும் மக்கள் வாழ்நிலையும்

2006 நவம்பர் முதல் இன்று வரை யுத்தம் காரணமாக 4ஆயிரம் மக்கள் மரணமடைந்துள்ளனர். காணாமற்போனோர் எண்ணிக்கை 1500. கடந்த வரவு செலவுத்திட்டத்தில் யுத்தச் செலவுகள் இரட்டிப்பாக்கப்பட்டதுடன் யுத்தம் முன்னெடுக்கப்படுவதினால் சமூகத்தில் பல மோசமான பிரதிபலன்கள் ஏற்பட்டுள்ளன.

மோசமான பிரதிபலன்களில் ஒன்று சுற்றுலாத்துறையின் வீழ்ச்சி நிலையாகும். ஹோட்டல்கள் பல வெற்றிடமாகியுள்ளதன் காரணமாக அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பெரும் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.



ஹோட்டல் துறையுடன் தொடர்புடைய பல உப தொழிற்துறைகளும் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளன.

வெளிநாட்டு முதலீடுகள் பூச்சிய நிலையை எய்தியுள்ளன. யுத்த நிறுத்தம் நிலவிய வேளை வடக்கின் பொருளாதார வளர்ச்சி வேகம் 11 சதவீதமாகக் காணப்பட்டது. இன்று வளர்ச்சி வேகம் 3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

வடக்கு கிழக்கில் அகதிகளாகும் மக்கள் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. யுத்தம் காரணமாக அச்சத்தில் தப்பியோடும் மக்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

யுத்தத்தில் பயன்படுத்தப்படும் பல்குழல் ஏவுகணை ஒன்றின் விலை ஒரு இலட்சம் ரூபாவாகும். யுத்தம் ஆரம்பமான முதல் எத்தனை பல்குழல் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும்? 5 நிமிடங்களுக்கு ஒரு முறை பல்குழல் ஏவுகணைகள் ஏவப்படுவதினால் அதைப் பற்றிய கணக்கெடுப்பினை மேற்கொள்வது இலகுவாக இருக்கும்.

ஒரு பல்குழல் ஏவுகணையில் இருவருக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று ஒரு முறை சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்திருந்தார். பல்குழல் ஏவுகணையை ஏவுவதற்கு இருவர் தேவை என்பதனை அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கக் கூடும். இது எவ்வளவு மோசமான நிலைமை?

எமக்கு நிதி உதவிகளைச் செய்துவந்த சர்வதேச நிறுவனங்கள் மெல்ல மெல்ல அந்த நடவடிக்கையில் இருந்து பின்வாங்கிச் செல்கின்றன. பலர் நிதி உதவிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மனித உரிமை மீறல்களினால் சர்வதேச ரீதியில் எமக்கிருந்த மதிப்பு நிலை குறைவடைந்து செல்கின்றமை கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும். சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற மனித உரிமை அமைப்புகளுடன் நாம் மேற்கொண்டிருக்கும் முறுகல் நிலை காரணமாக எமது நாட்டின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு பிரச்சினை, உளவியல் பிரச்சினை மற்றும் உடலியல் சித்திரவதைகள் என்று தென்னிலங்கை மக்கள் பல மட்டங்களில் தியாகங்களை மேற்கொள்வது அதிகார தரப்பினர் யுத்தத்தில் வெற்றி கொள்வர் என்ற நம்பிக்கையிலாகும். இது மிகவும் ஆச்சரியமான கனவாகும்.

தமது பிரதேசத்திற்குள் எதிரிகளின் அச்சுறுத்தல் உள்ளது என்று தெரிந்து கொண்ட பின்னர் அந்தக் கனவு தவிடு பொடியாகி விடுகின்றது. புகையிரதத்தில் பஸ் வண்டியில் குண்டுவெடிப்பு; பாடசாலையில் குண்டு அச்சுறுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களை தவிர பிற சந்தர்ப்பங்களில் அவர்கள் யுத்தத்தில் வெற்றிபெறும் கனவிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கனவு நிலையில் இருந்து நாம் மீள வேண்டும்.

தென்னிலங்கையில் இவ்வாறான நிலைமை காணப்பட்டாலும் வடக்கில் நிலவும் மக்கள் வாழ்க்கையின் துன்பியல் நிகழ்வுகள் சாதாரண பொதுமக்கள் மத்தியில் யுத்தம் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்பவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் மிக மோசமான வகையில் உணவுப் பற்றாக்குறை நிலவியது. தற்போது யாழ்ப்பாணத்திற்கு உணவு அனுப்பப்பட்ட போதிலும் அவற்றைக் கொள்வனவு செய்வது இலகு அல்ல.

அவ்வாறே கிழக்கின் நிலைமையிலும் மாற்றமில்லை. அவர்கள் அனைவரும் அரை வயிற்றுக்கு உணவை உட்கொண்டு மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பின் காரணமாக இருட்டிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

## தெற்கின் கருத்துக்கள்

உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அவற்றை விட மிகவும் கவலையான விடயமாகும். நாளாந்தம் வடக்கு கிழக்கில் காணாமல் போகும் சம்பவங்கள், கொலை செய்யப்படும் சம்பவங்கள் பலவற்றை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

இந்த கவலைக்குரிய விடயங்களுக்கும் நிச்சயமற்ற தன்மைகளுக்கும் நாம் எப்பொழுது முற்றுப்புள்ளி வைக்கப்போகின்றோம்?

கலாநிதி குமார் ரூபசிங்க



## வாடும் மல்லிகை

இறைவன் இல்லை மகளே
பீடத்திலும் அவன் இல்லை
பெரிய கோவிலின் இரும்புக் கதவுகள்
துக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன

நெற்றியில் இருக்கும் குங்குமப் பொட்டு
கட்டியாள முடியாத உன் நீண்ட கூந்தல்
வேதனையை அறியுமோ தெரியவில்லை
வண்டுக்கண்கள் வாட்டமடைகின்றனவே

வீட்டில் தீமூட்டும் அறையில்
வடை தோசை இட்லி சமைக்கிறாய்
கரும்புகையின் தொடுகையால் அழகும் குன்றுகின்றாய்
உன்னை அழகுபடுத்த என்ன செய்வேன்

பௌர்ணமி நிலவின் ஒளி குறைகின்றது
இரவில் பூத்து வாடும் மலராக நீ
உன்னை பார்த்து வாடுகிறேன் மகளே
வயதான சிங்களமாக நான் செய்வதறியாது

தங்கம் வெள்ளியை வழங்க முடியாது
படுக்கும் தரை மட்டுமே சொந்தம் —
ஆழ் கிணற்றின் நீர் குளிரும் ஆனால்
வரதட்சணை கேட்கும் உள்ளங்களுக்குள் ஈரம் ஏது

உன் மனதை வென்ற கிருஷ்ணக் கடவுள்
உன்னையே கேட்கும் கடவுள்
இருக்கின்றார் அவர் கோயிலின்
இரும்புக் கதவுகளை தகர்ப்பாரா

-கே.எம்.ஐ. சுவர்ணசிங்க

## ஆசிரியர் குறிப்பு

அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் நீண்டகால யுத்தத்தில் சிக்குப்பட்டுள்ளனர்.

இந்த யுத்தத்தின் கடந்தகால, நிகழ்கால துன்பியல் பற்பல உண்டு. உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதை விட உடன்படிக்கைகளை மீறும் போக்குகளே அதிகம் நிலவுகின்றன. உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் எண்ணிலடங்காதன. இவற்றுடன் சமூகத்தில் யுத்த மனநிலை வேரூன்றியிருப்பதும் தவிர்க்கமுடியாத விடயமாகியுள்ளது.

சோர்ந்து களைப்படையும் போது அல்லது பிற உத்திகளை சோதித்துப் பார்க்கும் போது பயன்படுத்தப்படும் ஒரு விடயமாக யுத்த நிறுத்தத்தை இரு தரப்பினரும் மாற்றியுள்ளனர். இவ்வாறான பழிவாங்கல்களினால் சிறந்த அறுவடைகளைப் பெறமுடியுமா?



# தரிசனம்

சரிநிகர்

# யுத்தத்தின் முடிவு என்ன?

## மக்கள் கிளர்ந்தெழாத வரை யுத்தம் நீடித்திருக்கும்

**என்..ஆத்மா**

(எழுத்தாளர் – ஊடகவியலாளர்)

ஆழமாகவும் கூர்மையாகவும் கவனித்தால் யுத்தத்தில் முனைப்புக்



கொண்டுள்ளவர்கள் கடந்த மூன்று தசாப்த காலத்தில் போர் மூர்க்கத்தின் இடை அகப்பட்டுள்ள மக்கள் தொலைத்துக் கொண்டிருக்கும் வாழ்வு தொடர்பில் இதய சுத்தி யுடனும் நேர்மையுடனும் எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்ததாகக் குறித்துச் சொல்ல முடியவில்லை. சமாதானத்திற்கும் தீர்வுக்குமாக வாய்த்த சந்தர்ப்பங்கள் பலவும் தவறிச்செல்வதற்கு உள்ளொன்றும் புறமொன்றும் கொண்டிருந்த நிலைப்பாடுகள் காரணமாக இருந்துவந்துள்ளதென்பது இலகுவில் புறமொதுக்கி விடக்கூடிய சாதாரணமான குற்ற வகை சார்ந்ததென்று தோன்றவில்லை.

மாற்றத்துக்குள்ளாகாதிருக்கும் விடுதலைப்புலிகள் தரப்பும் ஆட்சி மாறியபோதும் நிலைப்பாடுகளில் மாற்றம் பெறாத அரச தரப்புகளும் இன்னமும் கூட யுத்த சார்பிருக்கின்றனதென்பதை அரசியல் சந்தர்ப்பவாத காய் நகர்த்தல்களில் அவர்கள் அண்மைய காலங்களில் காண்பித்துவரும் அதீத ஆர்வங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தச் சூழ்நிலையின் நீடித்த கால அளவு, மக்களுக்கும் சமூக சூழலுக்கும் உணர்ச்சி மந்த நிலையைத் தோற்றுவித்துள்ளமையும் யுத்தத்தின் கொடூரங்கள் நடைமுறை வாழ்வாகவும் அன்றாடச் செய்திகளில் கவனத்தையீர்க்காதனவாகவும் ஆகிவிட்டிருக்கின்றமையும் இதன் முக்கியத்துவத்தை இல்லாதொழித்துள்ளன.

ஆயுதங்களை ஒழித்துவிடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடுமென நம்பும் ஒரு தரப்பும் ஆயுத மேலாதிக்கத்தினூடாக விடுதலையை எதிர்பார்த்திருக்கும் மறு தரப்பும் உயிர்ப்பற்றிய கிலியுடன் குரல் நாண்கள்செயலிழந்து போயுள்ள பொது அமைப்புகளும் வாழ்வை மீட்டெடுத்தாக வேண்டுமென்ற உயிர்த்துடிப்போடு கிளர்ந்தெழாத மக்களும் உள்ள ஒரு நாட்டில் இன்னும் பல தசாப்தங்களுக்கு இக் கொடிய யுகம்- யுத்தம் பல்வேறு சாக்குப்போக்குகளுடன் நீடித்திருக்கவே போகின்றதென்று தோன்றுகின்றது.

## சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வும் கௌரவமும் ஏற்படுத்தப்பட வேண்டும்

**பொ.பிரபாகரன்**

(மலையக சமூக செயற்பாட்டாளர்)

சர்வதேச அனுபவங்களை நோக்கும் போது இன்று இலங்கையில் இரு தரப்பாருக்கும் போர் தவிர்க்கவியலாத ஒன்றாக மாறி வருவதை அவதானிக்க முடியும். இரு தரப்பு நிலைப்பாடுகளின் இருப்பிற்கும் வேறு மார்க்கங்களை நாடக் கூடிய சூழல் இன்று வெகு தொலைவிலேயே காணப்படுகிறது. ஆனால் இதன் விளைவுகளை அனுபவிப்பவர்களாக பொது மக்களே உள்ளனர். நாள்தோறும் காணாமல் போதல், ஆட்கடத்தல், கொள்ளை, இடப் பெயர்வு, அகதி வாழ்க்கை, பாலியல் வன்முறைகள் என்பவற்றுடன் மனோரீதியான வடுக்களையும் அழுத்தங்களையும் தாங்கிய வண்ணமே பொதுமக்கள் நாட்களைக் கழிக்கின்றனர்.

இதன் காரணமாக சமூகங்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்வதுடன் போர் மனோபாவம் கொண்ட ஒரு தலைமுறை இந்த நாட்டில் வளர்ந்து வருவதையும் மறுப்பதற்கில்லை. இதன் விளைவுகள் எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும். உள்ளக இடப் பெயர்வுகள் அகதி வாழ்க்கையைத் தற்போதைக்கு நிரந்தரமாக்கி வருவதையும் மாணவர்கள் இடைவிலகல்களையும் கல்விக்கான வாய்ப்புக்கள் அரிதாகியுள்ளதையும் காண்கிறோம்.

மேலும் பொது மக்கள் தங்கள் உடமைகள், சொத்துக்கள் அனைத்தையும் இழந்து ஒரு நிரந்தரமற்ற வாழ்க்கை முறைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

எனவே, இதிலிருந்து மீள்வது பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் இது. சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும், ஒரு சமூகம் மற்றைய சமூகத்தின் உரிமைகளையும், தேவைகளையும் மதிக்கின்ற மனோபாவத்தையும் ஏற்படுத்த அதிகாரத் தரப்பிற்கு அப்பால் செயற்பட வேண்டியது இந்த நாட் டிலுள்ள ஒவ்வொரு குடிமக்களதும் கடமையும் பொறுப்புமாகும்.

## ஆளும் தரப்புகளை நன்முயற்சிக்கு நகர்த்த மக்கள் ஒன்றிணையவேண்டும்

**மேகலா சண்முகம்**

(மனித உரிமைச் செயற்பாட்டாளர்)

நாளாந்தம் நடக்கும் சம்பவங்களை உற்று நோக்கின் எதிர்கால நடப்புக்களின் குரூரமான விளைவுகள் கண்களின் முன்னால் நிழல் போல் தெரிகிறது. சர்வதேச அழுத்தங்களினால் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஓர் யுத்த ஓய்வைக் கொண்டிருந்தாலும் இனப் பிரச்சினைக்கான



தீர்வினை எட்டக்கூடிய நகர்வினைப் பெரிதாக கொள்ளவில்லையென்பது யாவரும் அறிந்ததே.

அவ்வாறான ஒரு நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அமைந்த புதிய அரசு ஆட்சி பீடமேறியது. ஆரம்பத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக நிகழ்ந்தசிறுசிறு சம்பவங்கள் இன்று தாகரமாகப் பெருத்து நிற்கின்றன. மீண்டும் நீடிய யுத்தத்துக்கு இரு தரப்பாரும் இறங்கும் அறிகுறிகள் தெளிவாகத் தென்படுகின்றன.

சட்டவிரோதமான நிலையில் இடம் பெற்று வரும் கொலைகள், காணமற்போதல், கைது, தடுத்துவைத்து சித்திரவதை செய்தல் என மனித உரிமை மீறல்கள் தொடுவானம் போல் தொடர்ந்து செல்கின்ற நிலையில், உலக நாடுகள் அனைத்தும் இதுபற்றிச் சுட்டிக்காட்டுவதோடு நில்லாது சமாதானப்பேச்சுவார்த்தைகள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாமென வலியுறுத்தி வருகின்றன. இனிவரும் போர்க் கள நிலை மிகவும் மோசமான பின்விளைவுகளை நாடு முழுவதிலும் விதைத்து விடுமென்பதில் ஐயமில்லை.

எனவே, ஒட்டுமொத்த தேசத்தின் மக்களும் இதனாற் பெரும் மனித அவலங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படின் எண்ணிப் பார்க்க முடியாத தாக்கங்களை நாம்சுமந்தாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

எனவேதான், யுத்தமற்ற சூழ் நிலையொன்று தோன்றி இனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றினை நோக்கிச்செல்ல வேண்டும். இந்நாட்டில் வாழும்இனக்குழு மங்கள் அனைத்துக்குமான தீர்வு இறுதித் தீர்வாக அமைதல் வேண்டும் என்பதும் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இவ்வாறான இருள் சூழ்ந்த நிலையினை நீக்கி நீடித்த சமாதானம்நிலைக்க உழைக்க வேண்டியது இந் நாட்டிலுள்ள ஒவ்வொருவரதும் கடமையே. பொது அமைப்புக்கள் குறிப்பாக ஊடகங்களின் தலையாய கடமையாக இவ்விடயம் முதன் நிலையைக் கொண்டிருந்த போதும், துரதிர்ஷ்டவசமாக இன, மத, குரோத வியாபார நிலையிலேயே பெரும்பாலான ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன. எனவே, இந்நிலை மாறவேண்டும். வரலாற்றுப் பாடங்கள் மிகவும் கசப்பானவை என்பதைநாம் அனைவரும் அறிவோம்.

எனவே அதனை உணர்ந்து செயற்பாட்டினை வகுக்க வேண்டும். கிழக்கு மாகாண இடப்பெயர்வு என்பது அண்மைக்கால அவலத்தின் சிறு உதாரணமே. மனித உரிமைகள் மீறப்படாது மனிதகுலம் வாழ ஆளும் தரப்புக்களை நன் முயற்சிக்கு நகர்த்த பொதுக்குரல்கள் ஒன்றிணைவது இன்றியமையாதது.

## மக்கள் பெருமளவு துயரங்களை அனுபவிக்க நேரிடும்

**வே.ஜசிகரன்**

(சமூக செயற்பாட்டாளர்)

நாட்டில் முக்கிய பங்கை வகிப்போர் சிவில் சமூகத்தின் நலன்களைப் பேணுவதை விட்டுவிட்டு தத்தமது அதிகாரத்தைத் தக்கவைப்பதிலேயே முனைப்பாக இருக்கிறார்கள். சிலவேளைகளில் இந்த முயற்சியூடாக தாம் வென்று விடுவோமென்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுக்கிறார்கள். இந் நிலைமையில் அரசாங்கம் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்தால் விடுதலைப்புலிகள் இதற்கு எதிரான பன்மடங்கு பலமான தாக்கு தலைத் திட்டமிட ஆரம்பிப்பார்கள்.

இந்தப் போட்டா போட்டி நிலைமை மிகப்பெரிய இராணுவ அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமையை மக்களுக்கு உருவாக்



கும். இதனால் மக்களேபெருமளவு துயரங்களை அனுபவிக்க நேரிடும். இரு தரப்பிலும் இடப்பெயர்வுகள், அழிவுகள் என அது தொடரும். இது அவர்கள் மீதான சுமையினை மேலும் மேலும் அதிகரிக்கும். ஸ்திர மற்ற சமூகங்களாய் ஆகும்போது அவர்கள் மீதான பொருளாதாரச் சுமையும் அதிகரிக்கும்.

இது ஒரு புறமிருக்க இந்தப் போர் முனைப்பு இராணுவ மயப்படுத்தப்பட்ட சமூகம் ஒன்று உருவாவதற்கு வழி வகுக்கும். அது ஒருவரை ஒருவர் நம்பாத சூழலையும் அந்தச் சூழல் உருவாக்கும் சந்தேகம் காரணமாக சந்தேகத்திற்குரிய நபர்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளும் அதிகரிக்கும்.

இதனடியாக மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கும். இது சமூகத்தின் ஜனநாயகப் பண்பை வேரறுத்துவிடும். புதிதாக அராஜகமும் கொடுங்கோன்மையும் உருவாக வழிசமைத்து விடும்.

# யுத்தமும் மக்கள் வாழ்நிலையும்

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்காவின் வரலாற்றில் போர் தனிப் பெருந்துறையாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கால கட்டங்களில் போர் தொடங்கப்பட்ட நோக்கம் அல்லது நோக்கங்களை எந்தளவிற்கு எட்டியிருக்கிறதென்பது மிக முக்கியமான கேள்வியாகி இருக்கிறது. இக்கால கட்டங்களில் போரிடும் தரப்புகள் எந்தளவிற்கு தங்களது அடிப்படை நோக்கங்களான சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றை எய்தியிருக்கின்றன என்பதும் அறிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

தொடர்ச்சியானபோர், இடையிட்டு வரும் போர் நிறுத்தங்கள் என்பவை பொது மக்களை, பொதுமக்கள் வாழும் சூழலை எப்படியானதாக ஆக்கியிருக்கின்றது, அல்லது ஆக்கி வருகின்றது.

போர்க் காலங்களில் எப்படித் தப்பித்துக் கொள்வது என்றும், போர் நிறுத்த காலங்களில் அடுத்து வரப்போகும் போருக்கு முன் நாங்கள் என்ன செய்து கொள்வது என்பதுமாகவே சிந்தனையோட்டங்கள் காணப்படும், காணப்படுகின்றன. தப்பித்துக் கொள்வதற்கான தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலுமே நினைப்புக்களும், நடப்புக்களும் முழுக்க முழுக்க ஈடுபட்டுக் கொண்டிருக்கும்.

இங்கு பணவசதி படைத்தவர்களது தெரிவு போர்ச் சூழலிருந்து வெளியேறுவதாக இருக்கும். பணவசதியற்றவர்கள் போர் சூழலில் வாழ்வதாக இருக்கும். போர்ச்சூழலில் வாழும் இளையோர் வளமும்சக்தியும் பொருளும் வீணடிக்கப் படுவதாகவும் சூழலிருந்து அந்நியப்பட்டதாகவும் ஆக்கப்பட்டிருக்கும்.

இது மிகப்பெரும் உழைப்புச் சக்தியை, மூல வளத்தை, சமூக பொருளாதார உற்பத்திக்கு பிரயோகிப்பதில் இருந்து அப்புறப் படுத்தியிருக்கும். மாறாக ஏலவே ஈட்டப்பட்ட அல்லது கடனாகவும் நன்கொடையாகவும் பெறப்பட்ட, பெறப்படுகின்ற பொருளாதார வளத்தை உறுஞ்சி உயிர் வாழ்வதாக இருக்கும்.

போர் மனிதர்களை அவர்களது உழைப்புக்களிலிருந்து அந்நியப்படுத்துகிறது. உழைத்து வாழ்ந்தவர்கள் கையேந்தி வாழும் அகதிகளாகின்றனர். போர், இடப்பெயர்வு வாழ்வை, இயல்பு வாழ்க்கையாக்கியிருக்கிறது. போர், உழைப்பற்றவர்களை சமூகத்தில் உற்பத்தி செய்து வருகிறது. இடப்பெயர்வு வாழ்வு, பாரம்பரிய வாழ்விடங்களின் தொழிற்துறையின் அழிவு, திறன்களை அடுத்த தலைமுறைக்கு அறியப்படாததாக ஆக்கி வருகிறது. பாரம்பரிய விவசாய, மீன்பிடி போன்ற தொழிற்துறைகளின் சூட்சுமங்களை அல்லது அடிப்படை அறிவையே பெற்றுக் கொண்டிருக்காத புதிய தலைமுறையினர் சிறப்புத் திறன்கள் எதுவுமற்ற கூலித் தொழிலாளர்களாக, குறைவான ஊழியக் கூலித் தொழிலாளர்களாக, எடுபிடிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதன் அடிப்படையில் உற்பத்தியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு வெளியிருந்து இறக்குமதி செய்யப்படும் முடிவுப் பொருட்களின் விற்பனையாளர்களாக இது பெரும் கறுப்புச் சந்தை அல்லது வெள்ளைச் சந்தை முதலாளிகளாக இருக்கலாம் அல்லது பண் பங்களைத் தெருவில் குவித்து கூவி விற்பவர்களாகவும், கொண்டு திரிந்து விற்பவர்களாகவும் இருக்கலாம்.

போர் ஒரு புறத்தில் தனக்கான வளங்களை ஆள்வளம், பொருள்வளம், சிந்தனைவளம், கற்பனை வளத் தையும் கூடத் தனதாக்கிக் கொள்ளும் அதேவேளை, சூழல் சார்ந்த உற்பத்தி முறைமைகளை நிரூபித்து வருவது அதிக கவனத்தைக் கோருவதாக இருப்பதில்லை. ஏனெனில் போரில் பெறும் வெற்றி அல்லது தோல்வி அது சார்ந்த எதிரெதிர்த் தரப்புகளின் அழிவு, அவர்க ளது ஆயுத தளபாட அழிவு அல்லது கைப்பற்றுதல், கட்டமைப்புக்களின் தகர்ப்புகள் அல்லது கைப்பற்றுதல், நிலங்களின் விடுவிப்பு அல்லது நிலங்களைக் கையாளுதல் என்பவை தருகின்ற சுவாரசியம் முன்னையதில் இருப்பதில்லை என்பதாகவேநிலைமை இருந்து வருகிறது.

போர் சுயமான உற்பத்திச் சூழலை இல்லாதாக்கி வருகின்றது. சுய உற்பத்திக்கான வளங்களை இல்லாமல் ஆக்கி விடுகின்ற உலகச் சூழலிய தாராளவாதப் பொருளாதாரச் செயற்திட்டத்தின் காரணமாக உள்நாட்டுப் போர்களும் மாற்றஞ் செய்யப்பட்டு முன்னெடுக்கப்படுகிறதோ என்ற கேள்வி எழுதல்கள் தவிர்க்க முடியாததாகி இருக்கிறது. ஆனால் போரின் வெற்றி தோல்வி பற்றி அரசியற் கண்ணோட்டத்தில், இராணுவக் கண்ணோட்டத்தில் அலசி ஆராயப்பட்டளவில் சிறு துளி கூட சமூக பொருளாதார நோக்கில் சிந்திக்கப்பட்டிருக்கிறதா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறாயின் சிந்தனை, புலமைசார் உரையாடல்கள், செய்திகள் என்பவையும் கட்டுப்படுத்தப்பட்டு, கவனிக்கப்பட வேண்டியதிலிருந்து கவனம் திசை திருப்பப்பட்டிருக்கிறதோ என்பதும் நோக்க வேண்டியதாகியிருக்கிறது. ஏனெனில் "முரண்பாட்டுத் தீர்வு" "உளவளச் செயற்பாடுகள்" பெற்றிருக்கின்ற முக்கியத்துவம் வலியது. ஆயினும் சமூக, பொருளாதார உருவாக்கங்கள், உற்பத்திகள் பற்றிய உரையாடல்கள் மிகவும் அரிதானதாக இருக்கின்றது.

உதாரணமாகக் கிழக்கின் "படுவான் கரை விடுவிடுப்பு" வெற்றி தோல்விகள் அரசியல் நோக்கில், இராணுவ நோக்கில் அலசி அலசிக் குவிக்கப்படுகின்றன.

ஆனால் விவசாயம், மீன்பிடி, பட்டி வளர்ப்பு என சுயாதீனமாக உழைத்து வாழ்ந்த மக்கள் நிவாரணம் வாங்கிகளாக

**சி. ஜெயசங்கர்**
விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம்

ஆக்கப்பட்டிருப்பதும், நீண்டகால உழைப்பின் விளைவாகப் பெருக்கப்பட்டிருக்கின்ற பட்டிகளின் அழிவும் நவீன வர்த்தக விவசாய முறையின் கோரத்திற்குத் தப்பி கைவிடப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட வீடுகளில் அழியுண்டு போன சுதேசிய நெல்லினங்கள் ஏற்படுத்திய வெற்றிடங்கள் என்பவை (பாது காப்பான இயற்கைச் சூழல் போருக்கான பாதுகாப்புச் சூழலாக அழித்துருவாக்கப்படுவது ) எப்படி இட்டு நிரப்பப்படும் என்பது பற்றி சிந்திப்போமாயின் அல்லது புரிந்துகொள்வோமாயின் எங்களின் எதிர்காலத் திசைவழி எது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்ததாக இருக்கும்.

ஆலோசனை நல்லதாயிருந்தால் அதனை எவர் கூறினார் என்பது பற்றிக் கவலை கொள்ள வேண்டாம்.

—அப்துர் றஹீம்

வலம்புரி

## பிரிட்டன் காட்டும் அக்கறை இலங்கையில் மாற்றத்தைத் தருமா?

இலங்கை விவகாரம் குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் வாதப்பிரதிவாதங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இன விவகாரம் தலைவிரித்தாடினாலும், அது பற்றி பிரிட்டிஷ் அரசு கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுமாறு இலங்கைக்கு பிரிட்டிஷ் தூதுவர்கள் மேலோட்டமாகக் கூறியிருந்தாலும்,

இலங்கை அரசின் யுத்த முனைப்புக்கு பிரிட்டனின் இராணுவ மற்றும் ஆயுத உதவிகள் தாராளமானவை என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந் நிலையில் இலங்கை விவகாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை ஓர் முக்கிய திருப்புமுனை என்றே கூறவேண்டும்.

இலங்கை இன விவகாரம் குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படுவதற்கு விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலும் முதன்மைக்காரணமாக இருக்கலாம் என்ற ஊகிப்புக்கள் பிழையானவை அல்ல.

எதுவாயினும் இலங்கை விடயத்தில் உலக நாடுகள் தற்போது விழிப்படைந்துள்ளன என்பது மட்டும் நிஜம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல என்பது பிரிட்டிஷ் அரசின் நிலைப்பாடு. அதேநேரம் இனப்பிரச்சினை தொடர்பில் அரசுடனும், விடுதலைப்புலிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் பிரிட்டனின் அறிவித்தல் கூறுகின்றது.

இலங்கையை தனது காலனித்துவத்திற்குள் வைத்திருந்த பிரிட்டன் 1948 களில் சுதந்திரம் வழங்கும்போது பெரும்பான்மையினரின் கைகளில் நாட்டின் அதிகாரத்தை கொடுத்துவிட்டது.

இதன் விளைவாக இலங்கைத் தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற முத்திரை குத்தப்பட்டு, அன்று முதல் இன்று வரை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக-அகதிகளாக-சொந்த வாழ்விடத்தில் குடியிருக்க முடியாதவர்களாக வாழ்கின்றனர்.

ஆக, இலங்கையில் தமிழ் மக்கள் படும் நிட்டூரத்திற்கு பிரிட்டனே மூலகாரணம் என்ற உண்மை நிலை மறுக்கமுடியாததாகும். எனவே இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டு தமிழ் மக்களுக்கு தீர்வுகிடைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் தார்மீகப்பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு எனலாம்.

தவறை இழைத்தவரே அதனைத் திருத்திக் கொள்வது இலகுவானதும், பொருத்தமானதும் என்ற அடிப்படையில் பிரிட்டிஷ் அரசு பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதும், அரசு மற்றும் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடந்த முன்வருவதும் ஏற்புடையது.

எனினும் இங்குதான் பிரிட்டனின் தவறு அல்லது பக்கச்சார்பு வெளிப்படுகின்றது. அதாவது இலங்கை அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராகும் பிரிட்டன் தனது நாட்டில் விடுதலைப்புலிகளுக்கு இருக்கக்கூடிய தடையை நீக்க வேண்டும்.

தடையை நீக்குவதனூடாக இருதரப்புடனான பேச்சுவார்த்தையும், சமாதானத் தீர்வும் சாத்தியமாகும்.

ஆனால் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு பிரிட்டன் தயார் இல்லை. இந் நிலையில் அந்த நாட்டின் சமாதான முயற்சி வெற்றி தரும் என எங்ஙனம் எதிர்பார்க்கமுடியும்?

## இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்பட்டும் பாடநூல் விநியோகம் முற்றுப்பெறவில்லை.

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தக விநியோகம் கல்வி ஆண்டில் நான்கு மாதங்கள் முடிவடைந்த போதிலும் முற்றுப்பெறாமல் இழுபறி நிலையில் காணப்படுகின்றது. உரிய பாடநூல்கள் எப்போது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு மாணவர்கள் கல்வியைத் தொடர்வதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் இலவச பாடப் புத்தக விநியோகத்தில் கடந்த வருடங்களிலும் தாமதங்கள் ஏற்பட்ட போதிலும் இந்த வருடத்தைப் போல் இதற்கு முன்பு பெரியவில் பாதிப்பு ஏற்படவில்லை என ஆசிரியர்கள், பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தரம் 10 மாணவர்களுக்கான தமிழ்மொழியும் இலக்கியமும், இலக்கியத் தொகுப்பு இலக்கிய நயம், கணிதம் ஆகிய புத்தகங்களும் தரம் 9 மாணவர்களுக்கு தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூலும் முழுமையாக வழங்கப்படவில்லை என்றும் விநியோகிக்கப்பட்ட ஏனைய புத்தகங்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிறதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் இரண்டாம் தவணை பாடசாலைச் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படும் என ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் மார்ச் 30 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில் கல்வி அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த வாக்குறுதி அளித்த போதிலும் இதுவரை யாழ்ப்பாணத்திற்கு தேவையான பாடப்புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படவில்லை என குற்றஞ்சுமத்தப்பட்டது. (ச-5)

## புலிகளின் விமானங்களை இந்தியா அழிக்கவேண்டும்

### சுப்பிரமணியசுவாமி கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியா மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதால் அவர்களின் விமானங்களை தாக்கியழிக்குமாறு இந்திய மக்கள் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை கேட்டுள்ளார்.

புலிகள், இந்தியா மீது தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது. சமீபத்தில் ஐந்து மீனவர்களை கொலை செய்ததுடன் 12 பேரை கடத்தியும் வைத்துள்ளனர். இந்திய அரசு இந்த ஆபத்தான நிலை குறித்து கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு அசாம் பிரிவினைவாதிகள், நக்ஸலைட் குழுக்கள் ஆகியன பயிற்சி அளித்துள்ளன. இதனால் இந்தியா புலிகளின் விமானங்களை அழிக்கவேண்டுமென சுப்பிரமணியசுவாமி கேட்டுள்ளார். (எ-5)

## குடாநாட்டில் நான்கு மாதங்களில் எண்பது பேர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த நான்கு மாத காலப்பகுதியில் 80 பேர் ஆயுததாரிகளினால் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமை ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகின்றது. கொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 18 தொடக்கம் 35 வயதுக்கிடைப்பட்டவர்கள் எனவும் பெண் ஒருவர் உட்பட 2 பேர் பல்கலைக்கழக மாணவர் எனவும் இந்து மதகுருவும் ஊடகவியலாளரும் படுகொலைசெய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

ஜனவரி மாதத்தில் 20 பேரும் பெப்ரவரி மாதத்தில் 8 பேரும் மார்ச் மாதத்தில் 33 பேரும் ஏப்ரல் மாதத்தில் 19 பேருமாக 80 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்ற நிலையில் ஏப்ரல் மாதத்தில் கடைசி இரு தினங்களில் 11 பேர் குடாநாட்டில் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ்.சிறைச்சாலையிலும் பொலிஸ் நிலையத்திலும் 72 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச)

## கடமைக்கு திரும்பாவிட்டால் கடும் நடவடிக்கை!

### மன்னார் ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

(மன்னார்)

மன்னார் மாவட்ட கல்வி வலயங்களின் பாடசாலைகளில் நியமனம் பெற்று கடமைகளுக்கு திரும்பாத வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடமைகளுக்கு திரும்பாவிடின் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னாரில் கற்பிப்பதற்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் சென்று திரும்பாமல் இருப்பதனால் இங்குள்ள மாணவர்களின் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாதது பெரும் பிரச்சினையாக உள்ளன.

பட்டதாரிகளான இந்த ஆசிரியர்கள் வராததினால் கணிதம், விஞ்ஞானம், கலை சம்பந்தமான முக்கிய பாடங்கள் இப் பகுதி பாடசாலைகளில் கற்பிக்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப் பகுதிக்கு வரவேண்டிய 22 ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர்

அமெரிக்க நாசா விண்வெளி விஞ்ஞானிகள் செவ்வாய்கிரகத்தை ஆராய்வதற்காக ஒடிசி என்ற செயற்கைக்கோளை ஏற்கனவே ஏவியிருந்தனர். செவ்வாய்க்கிரகம் அருகிகே பறந்தபடி பல்வேறு படங்களை அது அனுப்பி வருகிறது.

இதில் செவ்வாய்க்கிரகத்தில் ஏற்கனவே தண்ணீர் ஆறுபோல் ஓடிய தடயங்கள், தண்ணீர் ஆவியாக உறைந்து நின்ற காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இப்போது வேறு சில புதிய படங்களை அனுப்பியுள்ளது. அதை வைத்து ஆராய்ந்தபோது செவ்வாய்க் கிரகத்தில் பெரும் பகுதியில் பனிக்கட்டி மலைபோல உறைந்து கிடப்பது தெரிந்தது. எனவே செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருப்பது உறுதியாகிவிட்டது. (எ-1)

## இலங்கைக்கான சுற்றுலா பயணம் ஆபத்தானது

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நடவடிக்கைகள் மிகவும் உச்சக்கட்டத்தில் இருப்பதால் இலங்கைக்கு சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வது ஆபத்தானது என அமெரிக்க அரசாங்கத்தினால் அந்நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களை அடுத்தே அமெரிக்க அரசாங்கத்தினால் இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் எனவும் அதற்கான வாய்ப்புக்கள் உள்ளது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது எனவும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. (ச-5)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வறுதலைவிளான் ஒழுங்கை வீமன்காமம் என்ற இடத்தைச் சேர்ந்த குணரத்தினம் கிருபாகரன் என்பவரது விசேட அடையாள அட்டை (09070 13313) கண்டெடுக்கப்பட்டு *வலம்புரி* அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (ச)

## குடிநீர் விநியோகம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நீர் விநியோகிக்கும் குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கான நீர் விநியோகம் சில தினங்களுக்கு தடைப்பட்டிருக்குமென யாழ்.மாநகர சபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார்.

பிரதான குடிநீர்த் தாங்கியிலிருந்து ஆஸ்பத்திரி வீதி, இராசாவின் தோட்ட வீதி, கோயில் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் நீர் விநியோகக்குழாயில் மார்ட்டின் வீதிக்கும் மடம் வீதிக்குமிடையே உடைவு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வெளியேறி விரயமாவதை அவதானித்து, திருத்த வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதனால் திருத்த வேலை நிறைவு பெறும்வரை குறிப்பிட்ட பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## புலிகளின் தாக்குதலில் பொலிஸார் பலி

வவுனியா -மன்னார் வீதியில் சலம்பங்குளம் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரண் மீது சிறு ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுக் காலை 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் சம்பவம் குறித்து வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வெள்ளி நற்சிந்தனை 16

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

இயற்கையிடம் மனிதன் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. மனிதன் நேரில் காணும் இயற்கை வளங்கள் அவனுடைய வளமான வாழ்க்கைக்கு உதவுவன. மனிதன் இயற்கையைத் தண்டிக்கும் நிலையும் உண்டு. தான் வாழும் சூழலிலே உள்ள மரங்களை சிலவேளை மனிதன் வெட்டி அழிப்பதும் வழக்கமாகவுள்ளது. இது நிறுத்தப்படவேண்டும்.

ஆனால் அந்த மரமோ அவன் தன்னை வெட்டுகிற வரையும் குளிர்மை பொருந்திய நிழலைத்தரும். கொடிய வெப்பத்திலிருந்து மனிதனை காத்து நிற்கும். இந்த நிலை மனிதனிலும் இருப்பதைக் காணலாம். அறிவுடைய சான்றோன் தான் சாகும்வரை தனக்கு பிறர்பல தீமைகளைச் செய்தாலும் தன்னால் இயன்ற வரை அவர்களை காத்திடுவான்.

மனிதன் வெட்டும்வரை, மரம் தன் கொடைப்பணியைச் செய்கின்றது. வெயிலுக்கு நிழலாக நின்று காக்கின்றது. இந்த இயற்கையின் குணநலத்தை நாம் மனப்பதிவு செய்து கொள்ளவேண்டும். பிறருக்கு நன்மைசெய்வதே மனிதனின் பெருங்குணமாக அமைய வேண்டும் என நம்முன்னோர் எண்ணினர். அந்த எண்ணத்தை வெறும் கருத்தாக எடுத்துரைத்தால் எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

எனவே கண்முன்னே கண்டு தெளிவுபெறக்கூடிய வகையில் கட்சி ஒன்றுடன் கருத்தையும் இணைத்துக் கூறின் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும் என எண்ணிப் பாடல் வடிவிலே பதிவு செய்தனர். இளம் தலைமுறையினரும் சிறாரும் நேரில் காணும்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

காட்சியையே எடுத்துக் காட்டி விளக்கினர். இறப்பு வரை பிறருக்கு நன்மை செய்வதே மனித வாழ்க்கையின் பயனாக அமைய வேண்டும். வாழ்வில் பிறரை நோக வைப்பதால் மகிழ்வாக இருக்க முடியாது.

பிறர் எமக்குத் தீமைகளையே தொடர்ந்து செய்தாலும் நாம் அவற்றை உடனடியாக மறந்துவிடவேண்டும். மரம் தன்னை வெட்டுபவரை உடனே மறந்துவிடும். தன் பணியைச் செய்து அவர் துன்பத்தை தீர்க்கும். இதனை அநுபவமாக அனைவருமே நன்கு உணர முடியும். மூதுரைப் பாடல் இக்கருத்தை நமக்கு நன்கு தெளிவுறுத்தும்.

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர்-மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்"

(மூதுரை: 30)

## தமிழக முதல்வருக்கு...

தமிழகக் காவல்துறையினரால் இலங்கைத் தமிழர்களிடமிருந்து பணம், எலக்ட்ரிக் டெட்டனேற்றர்கள், வெடிபொருள் பூஸ்டர்கள், இருப்பு பால்ரஸ்கள், ஏ.கே.-56ரக துப்பாகிகள், தோட்டாக்கள் மற்றும் கைஎறி குண்டு கள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்ததாகவும் இவை தொடர்பாக இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகவும் காவல்துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள்தான் இவை போன்ற கடத்தல் சம்பவங்கள் அனைத்திலும் ஈடுபட்டவர்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். இருந்தபோதும் தி.மு.க.அரசு இக் கூட்டத்தில் சம்பவங்களில் எல்லாம் ஈடுபட்டவர்கள் விடுதலைப்புலிகள் என்று குறிப்பிடாமல் இலங்கைத் தமிழர்கள் என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் கருணாநிதி, விடுதலைப் புலிகளுக்கு மறைமுக ஆதரவு தருகிறார் என்பதையே இச் செயல் உணர்த்துகிறது.

விடுதலைப்புலிகளுக்கு தி.மு.க. அரசு எப்போதும் ஆதரவளிக்காது என்று சட்டமன்றத்தில் கருணாநிதி சொன்னாலும் விடுதலைப்புலிகள் மீதும் அதன் இயக்கத்தின் மீதும் கருணாநிதிக்கு எப்போதும் பற்றும் பாசமும் இருக்கின்றது என்பதற்கு காவல்துறை மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவலே போதுமான ஆதாரமானதாக இருக்கின்றது.

இச்செயல் தமிழ்நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயலாகும். இது கடுமையான கண்டனத்துக்குரியது என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கை இனப்...

தைகளை மேற்கொள்ள முடியுமா? என தாம் சவால் விடுவதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளைக் காட்டிலும் பொருளாதாரத்திலும் கூட தமிழகமே இலங்கைக்கு உகந்த இடமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க,

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது கடைப்பிடிக்கப்பட்ட பாதுகாப்பு முறைகள் இன்று 70 வருடங்களின் பின்னரும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவ தாகக் கூறினார்.

யப்பானியர் குண்டுகளை வீசும்போது தரையில் படுத்து விளக்குகளை அணைக்குமாறு அன்று பொது மக்களிடம் கோரப்பட்டது. அதே நடைமுறையே இன்று மின் குமிழ்களை அணைத்துவிட்டு வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நிலையாக மாறியிருக்கின்றது என்றார். (ச-3)

## மலையக, முஸ்லிம்...

பெருந்தோட்ட மக்களுக்கென ஒரு உப பிராந்திய சபையும் வடக்குக் கிழக்கு முஸ்லிம்களுக்கென மற்றுமொரு உப பிராந்திய சபையும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனையையும் தமது தீர்வுத் திட்டத்தில் முன்வைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (ச-5)

## வவுனியாவில்...

மணியளவில் பல்குழல் வெடிகணை மற்றும் எறிகணைச் சூட்டாதரவுடன் பெருமெடுப்பில் இராணுவத்தினர் முன்னேற முயற்சித்தனர்.

இந்நகர்வுக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகள் கடும்எதிர்த் தாக்குதலை நடத்தி படையினரின் முயற்சியை வெற்றிகரமாக முறியடித்தனர்.

இதில்கொல்லப்பட்ட இரு இராணுவத்தினரின் சடலங்களும் இராணுவத் தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## சு.கவின் தீர்வு யோசனை...

சந்திப்பு நேற்று மாலை அரசாங்கத் தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம் ஜயந்த் மற்றும் விஷ்வ வர்ணபால ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது,

நாட்டின் இனப்பிரச்சினைத்தீர்வுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. சர்வகட்சிக் குழு இதில் முக் கிய அம்சமாகும். சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை இலக்காகக் கொண்டு இது செயற்பட்டு வருகின்றது.

இதற்கு சகல கட்சிகளும் தமது தீர்வு யோசனைகளை முன்வைத்து வருகின்றன. சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனை இன்று சர்வகட்சிக்குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக் கப்படவுள்ளது.

இத் தீர்வுத் திட்டத்தில் திருத்தங்கள் அல் லது மாற்றங்கள் செய்வதற்கு யாராவது முன்வருவார்களாகவிருந்தால் அவர்களுடன் கலந்தாலோசிக்க நாம் எப்போதும் தயா ராகவுள்ளோம். இது மகிந்த சிந்தனையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒரு தீர்வு யோசனையாகும் என்றார். (ச-1,3)

## கடும் மழை...

வானிலை அவதான மையம் அறிவித்துள்ளது.

காலியில் நேற்றுக்காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரையிலான பகுதியில் 137 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் நூற்றுக்கு அதிகமான வீடுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. கொழும்பில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தல்கள் காற்றின் காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளன.

வங்காள விரிகுடாவின் கிழக்குப் பகுதியிலே உருவாகியுள்ள தாழமுக்கம் காரணமாக முற்பருவப்பெயர்ச்சி மழை பெய்கின்றது. இதேவேளை யாழ்.குடாநாட்டில் நேற்றிரவு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. எனினும் இதனால் ஏற்பட்ட சேதங்கள் எவையும் வெளியாகவில்லை. (ச-3)

## வேலணையில்...

சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என விசாரணைகளில் ஊர்காவற்று றைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு, பிரேத பரிசோதனையின் பின் சட லத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## இலங்கைக்கான நிதி உதவியை...

கொழும்பிலுள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகப் பேச்சாளர் இது குறித்துக் கூறியுள்ளதாவது,

அனைத்துலக சமூகம் பலமுறை விடுத்த வேண்டு

யுதவி நிறுத்தம் தொடர்பான எச்சரிக்கையை பிரித்தானிய அரசு விடுத்திருந்தது. பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானியா

## தென்மராட்சியை நேற்று மினி சூறாவளி தாக்கியது

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று மினி சூறாவளி வீசியதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மினி சூறாவளியினால் பனை மற்றும் தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் குடிசைகளினதும் காவலரண்களினதும் கூரைகள் தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மினிச் சூறாவளி காரணமாக மீசாலை மேற்குப் பகுதியில் பனை முறிந்து வீழ்ந்ததில் இரு சிறுவர்கள் காயமடைந்துள்ளனர். (ச-3)

### Calling for Tenders-Teching Hospital, Jaffna
**Renovation to Drivers room & Linen room**

1. The Chairmam of the divisional tender board, Teaching Hospital,Jaffna will receive sealed tenders for Renovation to Drivers room & linen room up to10 a.m on 18.05.2007. Tender forms may be collected from Director,Teaching Hospital, Jaffna up to 11.05.2007 on payment on nonrefundable deposit of 2000/=

2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

3. Tender forms are issued only contractors having valid registration in grade M7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL)

4. Sealed tenders may be dispatched either by registered post fo hand delivered to Director,T.H.Jaffna of deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10.a.m on 18.05.2007

5. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB,T.H.Jaffna.

6. For further details please contact Hospital Secretary,T.H.Jaffna.

***The Chairman,***
***Divisional Tender Board,***
***Teaching Hospital,***
***Jaffna.***
***Date:03.05.2007***
**Copy to:Resident Engineer,**
**CECB,**
**Jaffna.**

### Calling for Tenders-Teaching Hospital, Jaffna.
**Painting to Hospital Kitchen**

1. The Chairman of the divisional tender board,Teaching Hospital, Jaffna will receive sealed tenders for painting to hospital kitchen up to 10 a.m. on 18.05.2007 Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 11.05.2007 on payment on nonrefundable deposit of 1000/=

2. Tenders will be opened immediately after closing at

hospital kitchen up to 10 a.m. on 18.05.2007 Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 11.05.2007 on payment on nonrefundable deposit of 1000/=

2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

3. Tender forms are issued only contractors having valid registration in grade M7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL)

4. Sealed tenders may be dispatched either by registered post fo hand delivered to Director, T.H.Jaffna of deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10.a.m on 18.05.2007

5. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

6. For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*
*Date:03.05.2007*
**Copy to: Resident Engineer,**
**CECB,**
**Jaffna.**

*(C-040)*

## இலங்கைக்கான நிதி உதவியை...

கொழும்பிலுள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகப் பேச்சாளர் இது குறித்துக் கூறியுள்ளதாவது,

அனைத்துலக சமூகம் பலமுறை விடுத்த வேண்டுகோள்களை தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் நிராகரித்த நிலையில் இந்தத் தடை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இலங்கைக்கு 2005 ஆம் ஆண்டு 41 மில்லியன் பவுண்ட்ஸ் (81.6 மில்லியன் டொலர்) கடன் உதவி வழங்க ஒப்புக்கொண்டது.

இதனடிப்படையில் இந்த ஆண்டுக்கான ஒதுக்கீடான 6 மில்லியன் பவுண்ட்ஸில் 3 மில்லியன் பவுண்ட்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இதர தொகையானது எமது நிபந்தனைகளுக்கு முகம் கொடுக்கப்படும் நிலையில்தான் வழங்கப்படும் என்றார் அவர்.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இந்த நிதியுதவி நிறுத்தம் தொடர்பான எச்சரிக்கையை பிரித்தானிய அரசு விடுத்திருந்தது. பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சர் ஹிம் ஹாவல், அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசத்தயார் என அறிவித்திருந்த சில நாள்களிலேயே பிரித்தானியாவின் இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பல மணிநேரம் தமிழர் துயரம் குறித்த விவாதம் நடைபெற்ற நிலையிலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் இலங்கைக்கான நிதியுதவி நிறுத்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ச-3,5)

## கட்டுநாயக்கா...

இடைநிறுத்தி வைத்திருக்கின்றோம். இதுபற்றி நாங்கள் பல விமான நிறுவனங்களுக்கும் விமான நேரங்களை மாற்றியமைக்கும்படியும் மாற்றியமைக்கப்பட்ட நேரத்தில் விமானங்களை இயக்கும்படி கூறியிருக்கின்றோம் என்றார். விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலையடுத்து விமான நிலையம் மூடப்படுகின்றது என்று அர்த்தமாகுமா? என்று கேட்டதற்கு, விமான நிலையத்தை நாங்கள் மூடவில்லை. சில மணி நேரங்களுக்கு விமானம் நிலைய செயற்பாடுகளை இடைநிறுத்தி வைத்திருக்கின்றோம். பாதுகாப்பு விவகாரங்களின் சில கவலைகள் இருந்தன. விமானப் பயணிகள் மற்றும் விமான நிறுவனங்களின் பாதுகாப்பிற்காகவும் நாங்கள் இந்த நடவடிக்கையைஎடுத்துள்ளோம் என்றார். (ச-5)


**Jaffna College Undergraduate Dept**
**464, Hospital Road, Jaffna**

**★ புதிய பிரிவுகள் ஆரம்பம் ★**

External Degree-G.A.Q, BA, 1st in com (Jaffna University)

வங்கியில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கை நெறிகள் :-
**ACBF, CBF**
ஆரம்பம்:- 05.05.2007 (sat)

**Sinhala Classes Spoken Sinhala & G.C.E. O/L**
ஆரம்பம்: 04.05.2007 (friday) நேரம்:-10.30 மணி

**Pharmacists (External) Examination Course**
**min. Qualification G.C.E O/L Eng. ord pass**
**G.C.E. A/L 3 pass Including Chemistry**

(C-அ-060)

**-Director**


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.